இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்!

பெருஞ்சித்திரனார்

வெளியீடு :
தென்மொழி, சென்னை-5.

இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்

பெருஞ்சித்திரனுர்

வெளியீடு:
தென்மொழி, சென்னை-5.

இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்!

(நகர்மன்றத் தமிழ்ச் சங்க
பணிகளிடையே நிகழ்ந்த தொண்டுகளின் தொகுப்பு)
முதற் பதிப்பு : : 16-7-73
இரண்டாம் பதிப்பு : : 11-11-79
மூன்றாம் பதிப்பு : : 1-4-92
1200 படிகள்

உரிமை ஆசிரியருக்கு

விலை உரு. 5.00

இந்நூலிலோ, தொடர்புடையவையோ
எவ்வகையாலாகிலும் பயன்படுத்திக் கொள்ள
ஆசிரியர் ஒப்புதல் பெறுக.

நிலையம் ... அஞ்சல்,
சென்னை 155.

சிறப்புக் குறிப்பு :

இக்கட்டுரை படிக்கப் பெற்றவுடன், கருத்தரங்கத் தலைமை தாங்கியிருந்த பேராசிரியர் திரு அ.ச. ஞானசம்பந்தனார் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் எழுந்து, "இக்கட்டுரை மிகவும் சிறப்பான கட்டுரை! (அவர் கூறிய சொற்கள் : மகா அற்புதமான கட்டுரை) பல்கலைக்கழகப் பட்டத்திற்குரிய கட்டுரை போல் மிகவும் சிறப்பாக எழுதப் பெற்றுள்ளது" என் புகழ்ந்துரைத்து, "ஆண்டுக்கால இலக்கிய வாழ்க்கையில் இது போன்றதொரு சிறந்த கட்டுரையை நான் படித்ததுமில்லை; கேட்டதுமில்லை. இக்கட்டுரையை எல்லாரும் கட்டாயம் படிக்கச் செய்தல் வேண்டும். 'ஒரு கட்டுரை என்றால் எப்படி மெய்ப்பாட்டோடு செய்து எழுதுதல் வேண்டும்; என்னென்ன கருத்துக்களை விளக்குதல் வேண்டும்' என்பதற்கு இக் கட்டுரை சிறந்த இலக்கணமாக இருக்கிறது. இதனை எழுதிய **பெருஞ்சித்திரனார்** அவர்களை மிகவும் பாராட்டுகின்றேன். அவர் எழுதிய இக்கட்டுரைக் கருத்துக்களில் சில நம் கருத்துக்களுக்கு மாறுபட்டு இருக்கலாம். ஆனால் அக்கருத்துக்கள் மிகச் செம்மையாகவும் தெளிவாகவும் கூறப் பெற்றுள்ளன. அவ்வளவு சிறப்பான (அற்புதமான) கட்டுரை. இக்கருத்தரங்கைக் கூட்டிய கருத்தரங்கத்தவர்கள் கல்லூரியினருக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். இக்கட்டுரையைச் சிறு நூலாக அச்சிட்டு இங்குப் படிக்கின்ற மாணவர் ஒவ்வொருவருக்கும் கொடுத்துப் படிக்கச் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் கட்டுரை எப்படி எழுதப் பெறுதல் வேண்டும் என்பது அவர்களுக்குத் தெளிவாக விளங்கும். இவ்வேண்டுகோளைக் கட்டாயம் செயற்படுத்துமாறு மாநிலக் கல்லூரியினரை நான் கேட்டுக் கொள்கின்றேன்" — என்று மனம் விட்டுப் பாராட்டி அமைந்தார்கள். அவர் கருத்துப்படியே இக்கட்டுரை தென்மொழி வெளியீடாக 33000 உருபா விலையில் முன்னுரையுடன் வெளியிடப் பெற்றுள்ளது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

((ஆ-ர்))

தமிழ் வாழ வேண்டுமா?

'தமிழ்வாழ்க' வென்பதிலும் தமிழ்வா ழாது;
தமிழ்ப்பெயரை வைப்பதிலும் தமிழ்வா ழாது;
குமிழ்சிரிப்பைப் பெருஞ்சிரிப்பாய் அவிழ்த்துக் கொட்டும்
கொக்கரிப்புப் பேச்சாலும் தமிழ்வா ழாதே!
அமிழ்கின்ற நெஞ்செல்லாம் குருதி யெல்லாம்
ஆர்த்தெழும் உள் உணர்வெல்லாம் குளிரு மாறே
இமிழ்கடல் சூழ் உலகமெலாம் விழாக்கொண் டாடி
ஏற்றமிகச் செய்வதிலும் தமிழ்வா ழாதே!

பட்டிமன்றம் வைப்பதிலும் தமிழ்வா ழாது;
பாட்டரங்கம் கேட்பதிலும் தமிழ்வா ழாது;
எட்டிநின்றே இலக்கியத்தில் இரண்டோர் பாட்டை
எடுத்துரைத்துச் சுவைபடவே முழக்கினாலும்
தட்டி, சுவர், தொடர்வண்டி, உந்து வண்டி
தம்மிலெல்லாம் 'தமிழ் தமிழ்'என் றெழுதி வைத்தே
முட்டிநின்று தலையுடைத்து முழங்கினாலும்
மூடர்களே, தமிழ்வாழப் போவ தில்லை!

செந்தமிழ்செய் அறிஞர்களைப் புரத்தல் வேண்டும்!
செப்பமொடு தூயதமிழ் வழங்கல் வேண்டும்!
முந்தைவர லாறறிந்து தெளிதல் வேண்டும்;
முக்கழக உண்மையினைத் தேர்தல் வேண்டும்!
வந்தவர் செய் தீங்குகளால் தமிழர்க் குற்ற
வரலாற்று வீழ்ச்சிகளை எடுத்துக் கூறி,
நொந்தவுளஞ் செழித்ததுபோல் புதிய வையம்
நோக்கிநடை யிடல்வேண்டும்! தமிழ்தான் வாழும்!

தண்டமிழில் பிறமொழியைக் கலந்து பேசும்
தரங்குறைந்த தமிழ்வழக்கை நீக்கல் வேண்டும்!
தொண்டரெலாந் தெருக்களிலே கடைகள் தோறும்
தொங்குகின்ற பலகைகளை மாற்றச் சொல்லிக்
கண்டுநிகர் தமிழ்ப்பெயர்ப்பால் புதுக்கல் வேண்டும்!
கற்கின்ற சுவடிகளில், செய்தித் தாளில்,
விண்டுரைக்கா அறிவியலில், கலையில் எல்லாம்
விதைத்திடுதல் வேண்டும் தமிழ்! வாழும் அன்றே!

முன்னுரை:

விலங்கினின்று மாந்தனை வேறுபிரிக்கும் சில கூறு பாடுகளில் தலையாயது மொழி. கல்லாத ஒருவனின்று கற்றவனை வேறுபடுத்திக் காட்டுவதும் மொழியே. பிறவிச் சிறப்புக்கும்கூட மொழியை அடிப்படையாக்கு கின்றது வள்ளுவர் வாய்மொழி [குறள் : 959]. தெளிவான மொழி தெளிவான எண்ணங்களின் வெளிப் பாடு. நன்றாக எண்ணத் தெரிந்தவன் நல்ல மொழி யைப் பயன்படுத்துகின்றான். தெளிவற்றவனே மொழி யைக் குழப்புகின்றான்.

பேச்சை அடிப்படையாகக் கொண்டிருந்த மொழி எழுத்தையும் அடியொற்றி வாழத் தொடங்கியது மாந்த நாகரிகத்தின் இரண்டாவது படிநிலை! எனவே பேச்சும் எழுத்தும், மொழிக்குப் பிறந்த வீடும் புகுந்த வீடுமாகும். ஒரு பெண் பிறந்த வீட்டில் வளர்ச்சி யுற்றுப் புகுந்த வீட்டில் மலர்ச்சியுறுவதுபோல், மொழி, பேச்சு வழக்கில் வளர்ச்சியுற்று, எழுத்து வழக்கில் மலர்ச்சியுறுகின்றது.

மொழிக்குத் தலைவன் மொழியாளுநனாகிய எழுத் தாசிரியனே! அவனே இலக்கண ஆண் குழந்தை களையும் இலக்கியப் பெண் குழந்தைகளையும் ஈன்-றெடுக்கும் வாழ்வியல் தலைவனாவன். அவன் எக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாலும் மொழியாகிய தலைவியொடு முரண்படா வாழ்க்கை நடத்துதல் வேண்டும். எழுத்தற வாழ்விலும் மொழித்தலைவியை அடிமைப் படுத்தி வாழும் எழுத்துத் தலைவர்கள், தம் விருப்பம்போல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து மொழிநலத்தைச் சிதைக்கின்றனர்; பின்னர் தாமும் சிதைந்து போய்த் தம் வாழ்வையும் சிதைத்துக் கொள்கின்றனர்.

சில காலம் எல்லையொடு, சிறு தொழில் மேவி, சிற்றறிவால் வாழும் அச் சிறுமை எழுத்தர்கள், என்றும் நின்று இலங்குவதாகிய மொழி நலத்துக்குக் கேடு செய்வது இரங்கத்தக்கது. எனவே, எழுத்துவாழ்க்கை மேற்கொண்டொழுகும் இலக்கண இலக்கிய ஆசிரியர்-கள், தாம் கற்ற எல்லைப் பயன் கண்டு தம் எழுத்தற வாழ்வைச் செப்பமாக விளங்கிக் கொண்டு, மொழிக் குலைவு செய்யாமல் நிற்றற்கு உறுதுணையாக இக் கட்டுரை வெளியிடப் பெறுகின்றது.

'மொழி நலமே இலக்கிய நலம்; மொழி வளர்ச்சியே இலக்கிய வளர்ச்சி' — என்கின்றது, அளவில் சிறிய இக் கட்டுரை நூல்.

இதன் கருத்துகள் ஆயப்பெறலாம்; மறுக்கவும் பெறலாம். ஆனால் அவ்வாய்வாலும் மறுப்பாலும் அவற்றுக் கடிப்படையாயுள்ள மொழி மேலும் சிறப்புறும் வழிகள் சொல்லப் பெறுதல் வேண்டும்.

'வாழ்வியல்'— என்பது இன்றியமையாதது.

அதனுள் **'மொழியியல்'**—அதற்கொரு கலகலப்பை உண்டாக்கி, மாந்தனின் ஊமைத்தனத்தைப் போக்கு வது.

அவன் பேசுதல் வேண்டும்; நன்றாகப் பேசுதல் வேண்டும். அப்பேச்சு அவன் வாழ்வியலுக்குத் துணை போகும்படி சிறந்திலங்க வேண்டுமே தவிர, திரி-புணர்வுச் சிதைவால், இழிவடைய வேண்டுவதில்லை. அதற்குப் பேச்சைவிட அந்த ஊமைத்தனமே மேல்! அதில் மொழியில்லாமல் இருக்கலாம்; இழிவு இல்லை.

அறிஞர்கள் இத்துறையில் மேலும் எண்ணுக: அதற்கு இந்நூல் ஓர் ஏணிப்படி!

கடகம், க, தி. பி. 2004 }
16—7—73, கடலூர் - 1 }

அன்பன்
பெருஞ்சித்திரன்

இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்

(கரந்தைத் தமிழ்ச்சங்கம் 15—4—73 அன்று நடத்திய தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார் மணிவிழாக் கருத்தரங்கில் திரு. **அ. ச. ஞானசம்பந்தன்**, க.மு. அவர்கள் தலைமையில் படிக்கப் பெற்ற கட்டுரை.)

1: 0: மொழியின் இன்றியமையாமை:

1: 1: மாந்த இனத்தின் அகப்புற வளர்ச்சிக்கான பல்வேறு கூறுபாடுகளில் மொழி ஓர் இன்றியமையாத உறுப் பாகும். உடல் வளர்ச்சிக்கு எப்படி உணவு முகாமை யானதோ, அப்படியே உள்ளத்தின் வளர்ச்சிக்கும் மொழி முகாமையானதாகும். ஏதோ ஒருவகையில் மொழியைச் சுவறிக்கொள்ளாத உள்ளம் வளருவதேயில்லை. மக்கள் தங் களுக்குள்ள கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு கருவி என்பதாக மட்டும் மொழியை மதிப்பிட்டுவிடக் கூடாது. மொழியின் சிறப்பான பயன்களுள் கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் தன்மையும் ஒன்றாக விருக்கிறதே தவிர, அஃது ஒரு கருவி என்னும் அளவில் மட்டும் அதன் பயன் அடங்கு வதன்று.

2: 0: மொழியின் சிறப்பியல்கள்:

மொழியின் சிறப்பியல்களைக் கீழ்வருமாறு கூறலாம்.

2: 1: மொழி அக வளர்ச்சியின் புற வெளிப்பாடாகும்.

2: 2: இவ்வுலகிற்கும் மக்களுக்கும் உள்ள தொடர் பைத் துலக்கிக் காட்ட மொழியைப்போல் வேறொரு வெளிப்பாடு மாந்தரிடத்தில் இல்லை.

2: 3: மொழி முக்காலத்தையும் இணைத்து நிற்கும் ஒரு மெய்ப்பாடாகும்.

2: 4: மொழியில் வெறும் எழுத்துகளோ, சொற்களோ, தொடர்களோ, கருத்துகளோ மட்டும் இல்லை. மாந்தனின் அறிவு வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, துய்ப்பு உணர்வு வளர்ச்சி, வரலாறு, காலம், இடம் முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. இவ்வனைத்து நிலைகளிலும் மொழி தன் கால்களை ஊன்றியுள்ளது.

2: 5: ஒலியும் ஒளியுமாய் விரிந்து நிற்கும் இப்புடவியெங்கும் அளாவியுள்ள மெய்க்கூறுபாடுகளில், ஒலிக்கூறுபாட்டை மொழி வெளிப்படுத்துவதுடன் ஒளிக்கூறுபாட்டையும் தனக்குள் அடக்கிக் கொண்டுள்ளது. எனவே, மொழி அகமும், புறமும், அகப்புறமும், புறப்புறமும் ஆகும்.[1]

2: 6: மொழி இல்லையானால் உலகம் தன் இயக்கத்தில் ஒரு பகுதியை இழந்துவிடும்.

2: 7: மொழி மாந்தனுக்கு எவ்வளவில் இன்றியமையாததோ, அவ்வளவில் மாந்தன் மொழிக்கு இன்றியமையாதவன், மொழிக்கு அவன் ஆட்படுகின்றான்; மொழி அவனுக்கு ஆட்படுகின்றது.

2: 8: மொழியின் ஒவ்வொரு பகுதியும் மாந்த இனத்தின் ஒவ்வொரு பகுதியினரால் உருவாக்கப் பெற்றது. அவர்கள் மண்ணுக்குள் தங்கள் உடலையும், மொழிக்குள் தங்கள் உணர்வுகளையும் புதைத்து வைத்துவிட்டுப் போயிருக்கின்றனர். எனவே மொழியுள் பழைய மாந்த

---

[1] மொழியால் நினைப்பது அகம்; மொழியால் பேசுவது புறம்; மொழியால் எழுதுவது அகப்புறம்; மொழியால் கேட்பது புறப்புறம்.

ரைப் புதிய மாந்தர் இனங் கண்டு கொள்கின்றனர்; புதிய மாந்தரைப் பழைய மாந்தர் வடிவமைக்கின்றனர்.

2: 9: மாந்தன் இறந்துபடுகின்றான்; மொழி இறந்து படுவதில்லை. இறந்து போன மொழிகள் அணைந்து போன விளக்குகள்; நிலத்துள் புதையுண்ட விதைகள். விளக்குகள் என்றேனும் கொளுத்தப் பெறலாம்; விதைகள் என்றேனும் முளைத்து வரலாம்.[2]

2: 10: தொகுப்பாகச் சொன்னால், மக்கள் இனத்தின் ஒட்டுமொத்தமான மனமே மொழி. ஒரு தனிப்பட்ட இனத்தின் காலம், இடம், பொருள் ஆகியவற்றின் பருமானங்களை அதன் மொழியில் காணலாம்.[3]

2: 11: இங்குக் கூறப் பெற்ற மொழியின் அளவை நிலைகளால் அது மாந்தவினத்திற்கு எத்துணை இன்றியமையாத உறுப்பு என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

:0: தமிழ்மொழியின் தனித்தன்மை:

3:1: மொழிக்குள்ள சிறப்பியல்கள் அத்தனையும் விளங்கித் தோன்றும் முழுவளர்ச்சியுற்ற, உலகின் சில மொழிகளில், தமிழ் மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இதன் தனித்தன்மை ஓர் இனத்தின் தனி வரலாற்றையே உள்ளடக்கியதுடன், உலக மொழிக் குடும்பத்தின் பரந்துபட்ட தன்மைக்கே ஒரு மூல ஊற்றாக விளங்குகின்றது. இது மிகையான ஒரு கூற்றாக இல்லை என்பதை, இதன் பல்வேறுபட்ட வளர்ச்சி நிலைகளையும் அவை தொடர்ந்த பிறமொழித் தோற்றங்களையும், அறிவுக் கசடின்றி அறிந்து கொண்டவர்களே உணர முடியும். காலத்தாலும் அறிவாலும்

---

2 சமசுக்கிருதம், கிரேக்கம், ஈப்ரு முதலிய மொழிகள் மீண்டும் புதுக்கப் பெறுவதைக் காண்க.

3 பஃறுளி, கடாரம், துகி—இச்சொற்களில் காலம், இடம் பொருள் ஆகியவை அடங்கியிருப்பதை அறிக.

நன்கு காத்துப்புரக்கப் பெற்ற மொழி தமிழாகலின், அஃது உலகிலுள்ள மொழிகளை விட திட்பமும் நுட்பமும், செழுமையும் முழுமையும் நிறைந்து விளங்குவதை இக்கால் எல்லா மொழியினரும் உணர்ந்து வருகின்றனர். அஃது ஒரு வரலாற்றுப் பெட்டகம் போல் இருந்து, மாந்தனின் மன வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து அறிவுக் கருவூலங்களையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. அது கரணியப் பொருளாய் நின்று உள்ளுணர்வொடு கலந்து, அகக்கரண வளர்ச்சிக்கும், கருமப் பொருளாய் விளங்கி, உறுப்பொடு கலந்து நின்று, புறக்கரும வளர்ச்சிக்கும் அடிப்படையாக விருக்கின்றது.

4: 0: மொழியும் இனமும் :

4: 1: பெரும்பாலும் மொழிவளர்ச்சி, அது பேசப் பெறும் இனத்தின் வளர்ச்சியை ஒட்டியே அமைவதாகலின், தமிழின வளர்ச்சி தடைப்பட்ட பொழுதெல்லாம், தமிழ் மொழியின் வளர்ச்சியும் தடைப்பட்டே வந்திருக்கின்றது. தமிழினத்தில் வேற்றினக் கலப்பு ஏற்பட்ட பொழுதெல்லாம், தமிழ் மொழியிலும் பிற மொழிக் கலப்பு ஏற்பட்டு வந்திருக்கின்றது.

4: 2: இதுபோலவே இனப்பரவல் நேரும்பொழுதெல்லாம் மொழிப் பரவலும் நேரும். தமிழ் மொழி தமிழினப் பரவலை அடியொட்டி **உலகமெலாம் பரந்துபட்டு, வேறு பிற உலக மொழிகளுக்கும் மொழி மூலங்களை வழங்கி யிருக்கின்றது.**[4] இவ்வாறு இனப்பரவலால் மொழிக் கொடையும் இனக்கலப்பால் மொழித்தடையும் நேர்ந்திருக்கின்றன.

---

4 சமசுக்கிருதத்தில் ஐந்திலிரு பகுதி முழுத் தமிழ்ச் சொல். ஐந்திலிரு பகுதி தமிழ் வேரினின்றி திரிந்த திரிசொல். ஐந்திலொரு பகுதி இடுகுறிச் சொல்.

— தமிழர் மதம் - **பாவாணர்.**

தெலுங்கு : நான் - நேனு ஆம் - அவுனு நெருப்பு - நிப்பு
நாம் - மேமு ஆகாது - காது செருப்பு-செப்பு

5: 0: மொழிக்கலப்பும் மொழிக்கடனும் :

5: 1: இனப்பரவல், வாணிகம், அரசுத் தொடர்பு- இவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழுமாகலின், மொழிக்கொடையும் அவற்றுக் கேற்பவே நிகழ்ந்திருக்கும். மேலும், இனப்பரவலால் நாகரிகமும், பண்பாடும் பரவு மகாலின், அவ்வகையினும் மொழிக்கொடை நிகழும். அதே முறையில் இனக்கலப்பின் வழியாக மொழிக்கலப்பும் நேரும்.

அது-அதி அழுத்து-அத்து பருப்பு-பப்பு
அவை-அவி உருக்கு-உக்கு விருந்து-விந்து.

பிராகுவி : அப்பா - பாவா அம்மா - லும்மா நீர்-தீர்

மராத்தி : அக்கை-அக்கா செடி-ஜாடு மீசை-மிசா
கிண்ணம் - கிண்ண பழம் - பள்
வட்டி - வாட்டி
குடும்பு-குடும்ப பித்தளை-பீத்தல்
குயில்-கோயீல பெட்டி-பேட்டி
சாலை-சாலா மனம்-மன்

இந்தி : ஆம்-ஹாம்; ஓரம்-ஓர்;
சப்பட்டை-சப்டா;
இத்தனை-இத்னு; கட்டில்-காட்; சுக்கு-சூக்
உம்பர்-உப்பர் கன்னல்-கன்னு நோக்கு-
தேக்; பதம்(சோறு)-பாத் பிள்ளை-பில்லா
முகரை-முக்ரா

தியுத்தானியம் : கூவு-coo பிளிறு-blare மகன்-magus-mac

ஆங்கிலம்: கரை - cry உராறு - roar குட்டி - kid
ஊள் - ஊளை howl சப்பு-sup குருளை-
gurle, girl கனை-neigh தின்-dine
பையன்-boi, boy புல்லம்-bull சுறவு-
shark எல்லாம்-eall. all பூசை (பூனை)-
puss-pussy நாகம்-snake மெது-smooth

5: 2: மொழிக்கலப்பு என்பது தமிழ்மொழியைப் பொறுத்த அளவில் **மொழிக் கடன்** அன்று. இல்லாத ஒன்றைப் பெறுவதே கடன் ஆகுமாகலின், தமிழ்மொழியில் வந்து கலந்த சொற்கள் இல்லாமையின், தேவையால் கடன் வாங்கப் பெற்றவையல்ல. தமிழ்மொழி மொழிக் கடன் பெறும் அளவிற்கு வறுமையுற்ற மொழியில்லை. அஃது ஒரு நிறை மொழி; சொற் செல்வ மொழி. எனவே, தமிழ்மொழி பெற்றது கடனன்று; கலப்பே யாகும். இக் கலப்பும் அரசு மாற்றத்தாலும் இன மேலீட்டாலும் (ஆதிக்கத்தாலும்) ஏற்பட்டதாகும்.

6: 0: அரசு மாற்றமும் இனமேலீடும்:

6: 1: தமிழினத்தைப் பொறுத்த வளவில் அரசு மாற்றமும் இனமேலீடும், தமிழ்க்குமுகாயத்தைப் பெரும் சிதைவுகளுக்குள்ளாக்கி யிருக்கின்றன. அச்சிதைவுகளுள்—எல்லாம் தலையாயது மொழிச்சிதைவே யாகும். இச்சிதைவு சீரழிவு என்று கூறுமளவிற்குப் பெருத்த மாற்றத்தை மொழி நிலையில் ஏற்படுத்தி விட்டது என்று சொன்னாலும்

சமசுக்கிருதம் : அம்மா-அம்பா நாவாய்-நௌ மெது-ம்ருது
கத்து (கத்தி)-க்ருத் பொறு-பர்
துருத்து-தூத் மாது-மாத்ரு (பெண்)(தாய்)

இலத்தீனம் : பொள்-பொர் வலி-வலி முழுகு-மெர்கு
பொறு-பெர் வலம்-வேலர் மடி-மொரி
விடலை-வித்ல விழி-விதெ பார்-பரெ

கிரேக்கம் : மாத்திரை-மேத்ரு காண்-க்னோ
இலக்கம் - லியூக்கோஸ் அல்-அன் - அன்
கனு-கொனு
நாவாய்-நௌஸ் கும்-சிம்

—வடமொழி வரலாறு-**பாவாணர்**.

மிகையில்லை. இதற்குத் தமிழ் மக்களின் மடித்துயிலும், அக்கறையின்மையும், இரக்கவுணர்வும், ஒற்றுமையின்மையும் கரணியங்களாகும். அரசு மாற்றத்தாலும் இனமேலீட்டாலும் ஏற்பட்ட பிற இழப்புகள் வரலாற்றுச் சிதைவும், இனமேம்பாட்டுக் குறைவும், குமுகாய இழிவும், மூட நம்பிக்கைப் பித்தமும், இன அடிமையும், அரசிழப்பும் ஆகும். எனவே இவற்றினின்று தமிழினத்தை மீட்டாலொழிய மொழிக்கலப்பையும் சிதைவையும் சீரழிவையும் தடுத்து நிறுத்தவே முடியாது.

7: 0: மொழிச்சிதைவே தலையாய வளர்ச்சித் தடை :

7: 1: கடன் பெறுதல் ஏழைக்கு வளர்ச்சியையும், செல்வர்க்குத் தளர்ச்சியையும் தருவதாகும்.[5] எனவே தமிழ்மொழிக் கொடைபெற்ற பிற ஏழ்மை மொழிகள் வளர்ச்சியுற்ற அதே பொழுதில் செல்வ மொழியாகிய தமிழ்மொழி, மொழிக் கலப்பால் தளர்ச்சியுற்றது. மொழிக்கலப்பால் தமிழ்மொழியைத் தாக்கிய மொழிகளுள் முதலாவது ஆரிய மொழியாகிய சமசுக்கிருதமே. அவ்வகையில் தாக்கிய பிறமொழிகள் அரபியம், போர்த்துக்கீசியம், பிரஞ்சியம், ஆங்கிலம் முதலியவையாகும்.

---

5. அமுல், அலமாரி, அசல், அந்தஸ்து, அம்பாரி, அத்தர், அலாதி, அனுமத், அமீனா, இலாக்கா, இனாம், உஷார், உறுமால், கஜானா, கச்சேரி, கம்மி, கவுல், கஜூர், காபரா, கிச்சடி, கித்தான், குஸ்தி, குல்லா, குல்கந்து, கைதி, கொத்தவால், சால்வை, சிபாரிசு, ஜதை, ஜாலி, ஜாமீன், ஜிமிக்கி ஜோக்கு, ஸவாரி, ஸபாஸ், சலாம், சவால், சிப்பாய், சொக்கா, சொகுசு, சோம்பு, டப்பா, டமாரம், டப்பாசு, டப்பி, டபாய்த்தல், டபேதார், டம்பம், டவாலி, டஜன், டாணா, டாம்பீகம், டால், டிங்கி, டிமிக்கி, டேரா, டோலக், தஸ்தாவேஜு, தபால், தர்பார், தகரார், தண்டால், தமாஷ், தயார், தாகீத், தாவா, தாலுகா, தாக்கல், திவான், திவால், துப்பட்டா,

7 : 2 : தமிழ்மொழிக் கொடையால் வளர்ச்சியுற்ற மொழிகளுள்ளும் முதலாக நிற்பது சமசுக்கிருதமே! பிற மொழிகள் கிரேக்கம், இலத்தீனம், தியுத்தானியம், ஆங்கிலம் முதலியவை. சாக்சானியத்தினின்றும், கிரேக்க இலத்தினத்தினின்றும் உருவாகிய இற்றை ஆங்கிலத்தில் கூட கணிசமான ஒரு பகுதிச் சொற்களுக்குத் தமிழ்மொழி மூலங்களை வழங்கியிருக்கின்றது என்று ஆறுதல் வேண்டும்.[6]

தோலா, நகல், நகாஸ், நபரி, நவாபு, நமூனு, நாஜர், நாஷுக், நாடா, நிஜார், பக்கா, பக்கிரி, பங்கா, பங்கி, பஞ்சாயத், பந்தோபஸ்து, பஸ்லி, பட்டா, பரவாயில்லை, பலே, பல்டி, பர்பி, படே, பவுஷ், பஜார், பாரா, பாக்ஷா, பாதுஷா, பிராது, புகார், பேஜார், பேட்டி, பேஷ், பைசல், பைல்வான், மஹால், மனு, மசோதா, மகுதி, மக்கர், மஸ்து, மாமூல், மாஸுல், மாஜி, மிட்டா, மிட்டாய், மிராசு, முகாம், முலாம், முச்சலிக்கா, முண்டாசு, முஸ்தீபு, முன்சீப் முன்ஷி, மேஸ்திரி, மேஜை, மோஸ்தர், ரஜா, ரஸ்தா, ராஜி, ராஜிநாமா, ருஜு, லட்டு, லங்கோட், லகான், லப்பை, லாடு, லாயக்,லாயம், லோடா, வக்கீல், வக்காலத், வசூல், வஜா, வஸ்தாத், வாய்தா, ஹுண்டி, ஹோதா, ஷர்பத், ஷிகார், ஷோக், காஜி, சந்தா, துக்கடா, தபா, தினுசு, திவாலா, துபாஸ், படா, பாக்கி, புல்லாக்கு பேமானி, பேசரி, போணி, மராமத்து, மாமுல், லாடம், லேவாதேவி, லுச்சா, வாபீஸு, ஸந்நாசி, சாவி, ஜன்னல், வியாஸம், ஏகோபித்து, நிரூபம், யோஜி சீசா, ஜல்தி, திராணி, ராணுவம், பீப்பாய், கிராக்கி, நயம், ரொட்டி, தண்டோரா, செல்வாக்கு, பகோடா, ஜாடை, படுதா, பில்லை, லஞ்சம், சாம்பார், சட்ணி, நிதானம் சொஜ்ஜி, பஜ்ஜி, லாந்தர், ஜம்பம், தகவல், கோப்பை, எஜமான், வஸதி, கமான், வங்கி, கொஞுசு-முதலிய எண்ணிறந்த சொற்கள் இன்றும் கலந்து வழங்கி வருவதால் தமிழ் அடைந்தது தாழ்வே என்க.

6. See, "Tamil its-contribution to the European Languages" by. K.C.A. Gnanagiri.

7: 3: ஒரு மொழி வளர்ச்சிக்குள்ள தடைகள் அனைத்திலும் மொழிக்கலப்பால் நேர்கின்ற மொழிச் சிதைவே தலையாய தடையாகும். மொழிக்கலப்பு, மொழியை வளரச் செய்யும் என்பது, வந்து கலக்கின்ற மொழியையும் அக்கலப்பை ஏற்றுக் கொள்கின்ற மொழியின் தன்மையையும் பொறுத்ததாகும். ஆங்கிலத்துள் சாக்சானியம், இலத்தீனம், கிரேக்கம், பிரஞ்சியம், இசுப்பானியம், நார்வேனியம், அசீரியம், தியுத்தானியம், ஈப்ரு, கெல்திக், பிரெசியன், ஆப்பிரிக்கன். செருமானியம் கோதியம், அங்கேரியம், அரேபியம், சிலாவனியம், ஐசுரி, உரோமானியம், பல்கேரியம், போர்த்துக்கீசியம், சமசுக்கிருதம், திரவிடம், துருக்கியம், சீனம், உருசியம், டேனியம், அக்கேடியம், பின்னியம் முதலிய பல மொழிகள் கலந்ததாலேயே அது வளர்ச்சியுற்றுப் பரவலாக வழங்குகின்றது. இன்று உலகில் ஆங்கிலத்தைத் தங்கள் தாய்மொழி போல் கருதிப் பேசும் மக்கள் ஏறத்தாழ முப்பது கோடிப் பேர் ஆகும். சீனத்திற்கு அடுத்தபடி மிகுந்த மக்களால் பேசப்படும் மொழி அது.

8: 0: இனத்திரிபும் மொழித்திரிபும் :

8: 1: ஆங்கிலம் போலும் ஒரு மொழி தன்னை அறவே இழந்துவிட்ட நிலையில் உலகில் எங்கும் இல்லை. அதற்கு அதுவே சிறப்பான நிலை என்று சொல்லும்படி அஃது இருக்கிறது. ஆங்கிலம் தன் பெயரைக் காப்பதற்குக் கூடப் போதுமான அளவில் அதற்குரிய மொழிச் சொற்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் அறிந்தால், அது மொழிக்கலப்பால்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் ஒப்புக் கொள்ளல் வேண்டும். ஆனால் தமிழ்மொழிக்கு நேர்ந்த மொழிக் கலப்பு அதன் மொழியைத் தூய்மையிழக்கச் செய்ததோடன்றி, அதனை இழிவடையவும் செய்தது. இன்னுஞ் சொன்னால் அதன் மொழிவளர்ச்சியைத் தடுத்து, அதன் இனத்தையும்

மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய மொழியினங்களாகப் பிரிவுறச் செய்தது. **மொழிக்கலப்பு நேர்ந்திருக்கவில்லையானால், இந்தியாவின் பேரினம தமிழினமாகவே இன்றுவரை இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.** மேலும், மொழிக்கலப்பும் ஒலிக்கலப்புமன்றோ தமிழினின்று மலையாளம், தெலுங்கம், கன்னடம், துளுவம், குடகம், துடவம், கோத்தம், கோண்டி, கொண்டா, கூய், ஒராஒன், இராசமகால், பிராகுவீ, குருக்கு, குவீ, பர்சி, கடபம், மாலத்தோ. நாய்க்கீ, கோலமி முதலிய மொழிகள் பிரிந்து வழங்க வழி வகுத்தன.

8: 2: இனத்திரிபுக்கு முன்னே நேர்வது மொழித்திரிபே! **இனத்திரிபால் ஓர் இனத்தின் மக்கள் பரப்புக் குறைவது போலவே, மொழித்திரிபால் ஒரு மொழியில் உள்ள சொற் பரப்பும் குறையும்**[7] இது மொழி வளர்ச்சியைப் பல்லாற்றானும் பெரிதும் தடைப்படுத்துவதாகும். குறைவுள்ள மொழிக்கு மொழிக் கலப்பு நிறைவு தரலாமேயன்றி, நிறைவுள்ள ஒரு மொழிக்குக் குறைவு தருவதுடன் கேடு விளைவிப்பதுமாகும். முலைப்பால் இல்லாத ஒரு முழு மலடி வேண்டுமானால் தன் வளர்ப்புக் குழந்தைக்கு விலைப்பாலைப் புகட்டலாம். முலைப்பால் உள்ள ஒரு நற்றாய் எதற்குத் தன் குழந்தைக்கு விலைப்பாலைப் புகட்டல் வேண்டும்? அவ்வாறு வீம்புக்காகப் புகட்டுவது அவளுக்கும் அக்குழந்தைக்குமே கேடு தருவதாகும். எனவே, மொழி வளர்ச்சிக்கு முதல் தேவையானது, அதன் மொழிக்கலப்பற்ற தன்மையே என அறிந்து கொள்க.

9: 0: மொழிக்கலப்பும ஒலிக்கலப்பும் :

9: 1: இனி மொழிக் கலப்பைப் போன்றதே ஒலிக் கலப்பும். ஒரு மொழியோடு வேறுமொழி வந்து கலக்கும்-

---

7 மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்தமையால் தமிழினத்தின் ஒரு பகுதியினரும் தமிழ் மொழியுள் ஒரு பகுதிச் சொற்களும் மொத்தத் தொகையினின்று குறைந்துபோனதைஓர்க.

பொழுது, பின் மொழியிலுள்ள சொற்களைப் பலுக்கு வதன் பொருட்டு, அதன் ஒலிக் குறியீடுகளை முன்மொழி யிலும் புகுத்தி வழங்கி வருவதே ஒலிக் கலப்பாகும். இவ் வொலிக் கலப்பு முன்மொழியிலுள்ள இயல்பான சொற்-கள் சிலவற்றைக்கூட மாறி வழங்கச் செய்து விடும் (ஜீரகம், ஜீனி, ஜவுளி முதலிய சொற்களைக் கவனிக்க). எனவே இவ் விருவகைக் கலப்பு நிலைகளும் ஒரு மொழியின் இயல்பான வளர்ச்சியைப் பெரிதும் கெடுத்து விடும். தமிழ்மொழியைப் பொறுத்த மட்டில். இவ்வொலிக் கலப்பும், மொழிக்கலப்-பும் அதன் வளர்ச்சியைப் பெரிதும் தாக்கியொடுக்கியே வந்துள்ளன. இவ்விரு கலப்பு நிலைகளும் அறவே இல்லா திருந்த காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சி தன்னிகரற்று விளங்கியிருந்ததும், அதன் அடிப்படையில் அமைந்த இலக் கிய வளர்ச்சியும் அதற்குத் தக மிகச் சிறந்திருந்ததும், அக் கலப்பு நிலைகள் வளர வளர மொழி வளர்ச்சியிலும், இலக்-கிய வளர்ச்சியிலும் ஒருவகைத் தேக்கம் ஏற்பட்டதும், இன்னுஞ் சொன்னால், ஆக்கம் மிகுவாகக் குறைந்து போன துமே மேற்கூறிய கூற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டு களாகும்.

10: 0: மொழியும் இலக்கியமும்:

10: 1: எண்ணமே மொழியாக வெளிப்படுவதால், மொழியே இலக்கியத்திற்கு விளைநிலமாகும். விதை எத் துணை உயர்ந்ததாக விருப்பினும், நிலமில்லாமல் அதை விதைத்தலும் வேளாண்மை செய்தலும் இயலாது போலவே எண்ணம் எத்துணைச் சிறந்ததாக விருப்பினும் மொழியின்றி இலக்கிய வேளாண்மையும் நடவாது என்க. இனி, மொழி யின்றி எண்ணமும் தோன்றாது போகும். பேச்சு நிலையற்ற குழந்தை எண்ணத்திலும் விளக்கமுறாதிருப்பதும், பேச்சு விளங்க விளங்க எண்ணமும் வலுப்பெற்று வளர்வதும், அப் படியே எண்ணம் வலுபெற வலுப்பெறப் பேச்சும் விளங்கித்

தோன்றுவதும் ஊன்றிப் பார்க்கையில் மொழிக்கும் எண்ணத்திற்கும் உள்ள தொடர்பு விளங்கும்.

10: 2: இனி, ஒருவர் எத்துணையளவு உலகியலறிவு வாய்ந்தவராயிருப்பினும், மொழித் திறனற்று விளங்குவாரானல், அவரால் இலக்கியத்தைச் சமைக்கக் கூடுமோ? கூடாதாம் என்க. இனி, அவ்வாறின்றி மொழித்திறனுள்ள ஒருவர் உலகியலறிவு சிறிதே வாய்க்கப் பெற்றிருந்தாலும் கூட, அவர் ஓரளவு இலக்கிய வாக்கத்தில் சிறந்திலங்க முடிவதைக் காண்கின்றோம். **எனவே இலக்கிய வாக்கத்திற்கு வேறு பல திறன்கள் வேண்டுவன எனினும், மொழித்திறன் இன்றி இலக்கிய வாக்கமே நடவாது எனலாம்.** இங்கு, ஒருவர் ஒரு மொழியைத் தெரிந்து கொள்ளுதல் வேறு, அவர் அம்மொழியில் திறனுடையராதல் என்பது வேறு என அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

10: 3: மொழியை அடியூன்றிக் கற்கக் கற்கவே இலக்கிய வாக்கம் பெருகும். மொழியைக் கற்றல் என்பது அம்மொழி அளாவி நிற்கும் இலக்கண இலக்கியங்களைக் கற்றலும், அம்மொழியில் உள்ள வேறு பல துறை நூல்களைக் கற்றலும் ஆகும். வெறும் மொழியே எப்படி இலக்கியம் ஆகிவிடாதோ, அப்படியே வெறும் எழுத்தே மொழியாகி விடாது. ஒருவர் கற்கும் ஒருமொழி நூல்களுள் அம்மொழி தன் மெய்ந்நிலையோடு இயங்கவில்லையானல் அவர் அந்த மொழியை அறிந்து கொள்ளுதல் எப்படி?

11: 0: இலக்கிய வாக்கமும் மொழி வளர்ச்சியும்:

11: 1: உயிரும் உடலும்போல் மொழியும் இலக்கியமும் ஒன்றையொன்று ஒட்டி உயிர் வாழ்வனவாகும். மொழியுயிர்ப்பு இருந்தால்தான் இலக்கிய வுடல் இயங்கி வாழ்ந்து கொண்டிருக்கும். இலக்கிய உடலைப் பற்றிக் கொண்டுதான் மொழியும் இவ்வுலகில் இயங்குதல் வேண்டும். மொழி இறந்துபோன நிலையில், அதில் எழுதப்பெற்ற இலக்கியத்

திற்கு எவ்வகை வாழ்வும் இல்லை. வெறும் பூதவுடலைப் பாடஞ்செய்து, காட்சிச்சாலையில் காத்து வைப்பதுபோல், இறந்து போன மொழியின் இலக்கியத்தை நூலகத்தில் வைத்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். எனவே, ஒருமொழி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றால், அதில் உள்ள இலக்கியமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்று பொருள். இனி, அம்மொழியின் வாழ்வில் மொழிக் கலப்பும் ஒலிக் கலப்பும் ஏற்பட்டு, அது சீரழிந்துக் கொண்டிருக்கின்றது என்றால், அதில் உள்ள இலக்கியங்களும் சீரழிந்து கொண்டிருக்கின்றன என்று பொருள். இனி, அந்த மொழி படிப்படியாக உருமாறித் தன் உயிர்ப்பை அறவே இழந்துவிடும் பொழுது, அதில் உள்ள இலக்கியங்களும் உயிர்ப்பை இழந்துதான் ஆகல் வேண்டும். எனவே, எவ்வாற்றானும் மொழியும் இலக்கியமும் ஒன்றின் வளர்ச்சியால் மற்றொன்று உயிர் வாழ்கின்றது என்பதையும், மொழிச் சிதைவு நேரும் பொழுதெல்லாம் இலக்கியச் சிதைவும் கூடவே நேர்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொண்டாகல் வேண்டும்.

11: 2: தமிழ்மொழியில் கழகக்கால விலக்கியங்களைப் போல் மிகவும் சிறந்தனவும், கட்டுக் கோப்பு நிறைந்தனவும், என்றும் நின்று, உயிர்வாழும் தரமுடையனவும், இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் தோன்றாமைக்குக் கரணியம், படிப்படியாக ஏற்பட்ட மொழிக் குலைவே ஆகும். ஒருமொழியின் இலக்கிய வாக்கத்தை அந்த மொழிதான் உருவாக்கவும் காத்துக் கொள்ளவும் முடியும் என்பதை அறிந்து கொள்க. பிறமொழி இலக்கியமானாலும், அதை நம் மொழியில் நம் மொழிமரபு கெடாமல் செய்தாலொழிய அது நம் இலக்கியம் என்று கூறிக் கொள்ளல் முடியாது. [8]

---

8 எ-டு: கம்ப இராமாயணம், வில்லிபாரதம், இரட்-சண்ய யாத்திரிகம், நைடதம், மனோன்மணியம் முதலியவற்றை நோக்குக!

12: 1: இலக்கியத்தில் மொழியாளுமை :

12: 1: மொழியும் இலக்கியமும் உயிரும் உடலும் என்று கண்டோம். ஆனாலும், உயிரோடு உடல் இயங்கு கையில் உயிர்ச் சிறப்பை உடல் எண்ணிப் பாராமலும், உயிருக்கு நேரும் ஊறுபாடுகளை முன் நினையாமலும், அக்கறையின்றித் தன் விருப்பப்படி தாறுமாறாகச் சிற்சில நேரங்களில் இயங்கி, உயிரை வருந்தச் செய்வது போல், மொழிக்கு நேரும் ஊறுபாடுகளை எண்ணிப் பாராமல் இலக்கியவாக்கமும் சிற்சிலகால், சிலரால், தட்டுக்கெட்டுத் தடுமாறி, மொழிக்குச் சிதைவை ஏற்படுத்துகின்றது. அக்கால் மொழி வளர்ச்சி குன்றவே இலக்கிய வளர்ச்சியும் குறைவு படுகின்றது. ஆனால், உடற்சிதைவையும் உயிர்ச் சிதைவையும் உணர்ந்து கொள்ளாமல், மேலும் மேலும் நம் விருப்பப்படியே நாம் நடந்து கொள்வதைப் போலவே, மொழிச் சிதைவையும், இலக்கியச் சிதைவையும் உணராம லேயே சிலர் மேலும் மேலும் தம் மனம் போனபடியெல்லாம் இலக்கியத்தை ஆளுவர். ஆனால், **நோய்த் தன்மையை மருத்துவர் ஒருவர் உணர்ந்து எச்சரிப்பதுபோல், மொழிச் சிதைவையும் அத்துறை வல்லுநர்களே அறிந்து எச்சரிக்கை செய்ய முடியும். அவ்வெச்சரிக்கை புறக்கணிக்கப்படும் பொழுது இருவழியும் சிதைவுகள் மிகுதியாகி, உடல் அழிந்து படுவதைப் போல் இலக்கிய வளர்ச்சியும் அழிந்து படுகின்றது. இலக்கிய வளர்ச்சி அழியவே மொழிநிலையும் அழிவுறுகின்றது.** இதனால் இலக்கிய வாக்கத்தில் மொழியாளுமை எவ்வகையில் அளாவி நிற்க வேண்டும் என்பதை நன்கு அறிந்து கொள்க. மொழிச் சிதைவை உண்டாக்குகின்ற இலக்கிய வாக்கம் அதன் வளர்ச்சி நிலைக்கே கேடு செய்கிறது எனலாம்.

13: 0: இலக்கியத்தின் சிறப்பியல்புகள் :

13: 1: இனி, இலக்கியம் என்பது என்ன என்பது

பற்றியும், அதன் சிறப்பியல்புகள் பற்றியும் ஒரு சிறிது எண்ணிப் பார்ப்போம்.

13: 2: **''சிறந்த அறிவுணர்ச்சி உள்ளவரின் சிறந்த எண்ணம் சிறந்த மொழிவுயிர்ப்புடன். சிறந்த பொருள் நிலையைப்பற்றி வெளிப்படும் சிறந்த அமைப்பே இலக்கியமாகும்''.** இன்னுஞ் சுருக்கமாகச் சொன்னால், **''ஓர் உள்ளம் மொழிவழியாக இன்னோர் உள்ளத்தில் போய்க் கரைந்துவிடும் நிலையே இலக்கியம்''** ஆகும். இன்னமும் சுருங்கச் சொல்வதானால், **''உள்ளத்தின் காலடி இலக்கியம்''.**

13: 3: இலக்கியத்தின் புறவடிவங்கள் பலவாகலாம். அவை இசையாகவும் இருக்கலாம்; இயலாகவும் இருக்கலாம்; நாடகமாகவும் இருக்கலாம். இனி இவையுங்கூட பல உருவமாக விருக்கலாம். எதுவாக விருப்பினும் உண்மை இலக்கியத்திற்குப் பிறப்புண்டு; இறப்பில்லை. இலக்கியத்தில் உள்ளம் படிகின்றது; நுகருகின்றது; உறக்கம் கொள்கின்றது; தன் வாழ்க்கைக் களைப்பைப் போக்கிக் கொள்கின்றது. இறுதியில் அதைப் பற்றிக்கொண்டு தன்னோடு உறைய வைத்துக் கொள்கின்றது.

13: 4: இலக்கியமில்லாத மொழி விளைவற்ற களம்பு நிலம்போல் காட்சியளிக்கும். மக்களுக்கு உள்ளச் செழுமை ஊட்டுவது இலக்கியமே! உண்பதும் உடுப்பதும், உழைப்பதும் உறங்குவதுமாகக் கிடந்துழலும் வறட்சி வாழ்க்கையில் இலக்கியம் பசுமையையும், மணத்தையும் பரவச் செய்து கிளர்ச்சியை உண்டாக்குகின்றது. அது, கடந்த காலத்தை நினைவூட்டி, நிகழ் காலத்தை ஒரு பிடிப்புள்ள தாக்கி, எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றது. மக்களின் உள்ளம் கட்டுப் பாடற்ற காட்டு மாடாய்த் தட்டுத் தடுமாறிப் போகாமல் இருக்க, இலக்கியம் முட்டுக்

கொடுத்து அதனைத் தடுத்தாள்கின்றது. மாந்தனின் முருடு முருடான போக்கை வழவழப்புடையதாக்கி அவன் உள்ளத்தில் அறவுணர்ச்சியையும் மெய்யறிவுணர்வையும் பாய்ச்சுகின்றது. இலக்கியம் உணராதவன் உள்ளம் சிடுசிடுப்பு நிறைந்ததாகிப் பல சிக்கல்களை எதிர்நோக்கத் தகுதியற்றதாகப்போய்ச் சில நேரங்களில் தொய்ந்தும் போகின்றது. ஆனால் இலக்கியவுணர்ச்சி நிறைந்தவனின் உள்ளமோ எதையும்தாங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றதாகி, எத்தகைய இடர்ப்பாட்டுக்கும் ஈடுகொடுக்கும் வலுவுடையதாகச் செய்து கொள்கின்றது. பொறியியக்கம் உடையது போன்ற வாழ்வை உயிரியக்கம் நிறைந்ததாகச் செய்து தருவது இலக்கிய வுணர்வே!

13: 3: ஆனால், இக்கால், கடலுக்குள்ளும் ஏற்படும் உள்ளரிப்புகளைப் போல், இலக்கிய மொழி நடையிலும் சில தொய்வுகள் ஏற்பட்டு வருகின்றன. இவை இயற்கையாக ஏற்பட்டு வருவனவாகக் கொள்ள முடியாது. செயற்கையாக-சில உள்நோக்கங்களுக்காக-அல்லது அறியாமை அடிப்படையாக-சிலர் வேண்டுமென்றே செய்யும் உள்தோண்டு-தல் வேலை என்றே சொல்லுதல் வேண்டும். இல்லெனில் அவை சுட்டிக் காட்டப் பெற்ற பின்னும் தொடர்ந்து செய்யப் பெற்று வருமா? மொழி வளர்ச்சியை விரும்புவோர் முதலில் இத்தகைய உள்ளரிப்புகளை இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும். இந்த உள்ளரிப்புக்காரர்கள் மக்களை நேரிடையாக இலக்கிய உலகுக்கு அழைத்து வருவதாகச் சொல்லியே அவற்றைச் செய்து வருகின்றார்கள். மொழி என்பது அவரவர் விரும்புகிறபடியெல்லாம் கட்ட-மைத்துக் கொள்ளும் ஒரு தனிநிலைக் கோட்பாடு அன்று. தனியான ஒருவனுக்கு மொழி தேவையில்லை. எனவே மொழி எல்லாருக்கும் பொதுவான ஓர் இயற்கை விளைவு ஆகும். அதைத் தனியான ஒருவன் அவனின் மனக் கோணல்

மாணல்களுக்குத் தக்கபடி சிதைத்துக் கையாளுதல் குமு-காயக் கொடுங் குற்றமாகும். அவன் அதைப் பிறர் பொருட்டே கையாளுதல் வேண்டுமாகலின், பிறரின் மரபு நிலைப்படி அவனும் அதைக் கட்டிக்காத்தல் அவனின் தவிர்க்க முடியாத கடமையாகின்றது. ஓர் ஆற்று நீரை எவனும் அள்ளிக் குடிக்கலாம். அதை அவன் மாசுபடுத்துதல் கூடாது. அவ்வாறு அவன் தன் தனிநிலை உரிமையால், பொது நிலைக்குத் தகாத முறையில் ஊறுபாடு விளைவிப்பா-னுனல், அவனைக் குற்றவாளியாகக் கருதி தண்டனையளிக்க வேணடும். இக்கால் அக் காத்தல்நிலை இல்லாமல் இருப்பதே நாம் மொழி நிலையில் வளர்ச்சிபெற முடியாமற் போவ-தற்குக் கரணியமாகும்.

15: 4: இனி, அப்புன்மையாளரின் மொழிநிலைச் சிதைவுகளால் உருவாக்கப் பெற்ற இலக்கியங்கள் நெடு நாளைக்கு நிற்கும் வல்லமை பெற்றன வல்ல. சருகுகள் போன்ற எளிய மொழி நடைகளில் பற்றுகின்ற இலக்கிய நெருப்பு, கால ஊழிகளுக்கு ஈடு தரும் கனப்புடையதாக இருப்பதில்லை. அவை அடுத்துவரும் சில ஆண்டுகளிலேயே பூத்துச் சாம்பலாகப் போய்விடுவதை அவர்கள் உணர்தல் இயலாது. கீழை இலக்கியங்களிலும் சரி, மேலை இலக்கியங் களிலும் சரி மொழிக் கோப்பு, அமைந்த இலக்கியங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு இருந்து வருவதை அறிஞர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

15: 5: இவ்விடத்தில் ஒன்றைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் நல்லது. மொழிநடையின் கட்டுக்கோப்பு என்பது, பொது மக்களுக்கு அயலான அல்லது அவர்களின் கருத்துப்படி - கடினமான சொற்களால் அமைந்த நிலையே அன்று. சொல்லில் கடினமானது என்றும் எளிமையானது என்றும் இல்லை. நாம் அறியாத எளிய சொல்லும் கடினமே. நாம் அறிந்த அரிய சொல்லும் எளியதே! கல்லாதவர்

களுக்கு எல்லாச் சொற்களும் கடினந்தான். பொதுவாகப் புழக்கத்தில் என்பது தொண்ணூறு விழுக்காடு பயின்று வரும் சொற்களை எளிய சொற்கள் என்று நாம் கூறி வருகின்றோம். இருபது முப்பது விழுக்காடு பயிலும் சொற்களைக் கடினமான சொற்கள் என்று கருதுகிறோம். மற்றபடி சொல்லில் கடுமையோ எளிமையோ என்பவெல்லாம் வெற்று மயக்கமே!

15: 6: மண்ணினால் கட்டப்பெறும் வீடுகள் கட்டுதற்கு எளியவைதாம். முயற்சியும் குறைவுதான். பரவலாகவும் கட்ட இயல்கின்றவை, அவை. ஆனால் அவற்றை நம்மில் எவரும் விரும்பாதது ஏன்? அவற்றின் முயற்சி எளிமையையும் செய்பொருள் எளிமையையும் போலவே, நிலைப்பும் எளியதாகி விடுவதே! வெயிலுக்கும், மழைக்கும் ஈடு கொடுக்க முடியாமல் அம் மண்வீடுகள் விரைவில் சிதைந்து போவதில்லையா? அப்படிப் போன்றவைதாம் ‘எளிய’ சொற்களால் கட்டமைக்கப் பெற்ற ‘எளிய’ இலக்கியங் களும்.

15: 7: சென்ற இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் விரும்பிப் படிக்கப் பெற்ற வடுவூர் துரைசாமியார், ஆரணி குப்புசாமியார் முதலியவர்களின் புதினங்களை இன்று எத்தனை இளைஞர்கள் அறிந்திருப்பர்? ஆனால், அவை அக்காலத்தில் செலுத்திய இலக்கிய மேலாண்மைகள் எவ்வளவு தெரியுமா? புகழேந்திப் புலவரின் பாநடை தழுவிய கதைமாலைகளை இன்று எத்தனைப் பேர் படித்துச் சுவைக்கின்றார்கள்? புறநானூறும் திருக்குறளும் கைகளில் வைத்திருக்கும் பொழுதே நமக்கு ஒருவகைப் பெருமையை அளிப்பது ஏன்? **ஓமரையும் மில்டனையும் சேக்சுபியரையும் இளங்கோவையும் கம்பரையும்** எத்தனை ஊழிகளானாலும் எவராகிலும் அழித்து விட முடியுமா? காலந்தோறும் அவை புதிதாக முளைத்து முளைத்துக் காட்சி தருகின்றன என்பதை எவரேனும் மறுக்க

முடியுமா?— முடியாது—ஏன்? இங்குதான் மொழி நடையும் சொற்கோப்பும் இலக்கியவுணர்வைக் கட்டிக்காக்கும் இறும்பூதைக் கண்டு கொள்ளல் வேண்டும்!

15: 8: மொழிபற்றிக் கவலைப்படாமல், சொல்லோட்டங்களைத் தம் கருத்தோட்டங்களுக்கு ஏற்பப் பஞ்சு போலாக்கிப் பறக்கவிடுகின்ற இன்றைய எழுத்தாளர்களின் கோபுர இலக்கியங்கள், அடுத்து வரும் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளில், குப்பை மேடுகளுக்குப் போகாமல் காத்துக் கொள்ளும் ஆற்றல் சான்றவை என்பதைக் காலந்தான்உறுதி செய்ய முடியும்.

13: 5: எனவே, மக்கள் வாழ்க்கைக்கு இலக்கியவுணர்ச்சி மிகவும் இன்றியமையாததென்க. இனி, இத்தகைய இலக்கியவாக்கம் செய்கின்ற ஓர் இலக்கியப் புலவனின் மனநிலைகளைப் பார்போம்.

14: 0: இலக்கியப் புலவனின் மனநிலைகள் :

14: 1: இலக்கியம் பெரும்பாலும் மாந்தனின் உள்ளுணர்ச்சிகளின் தொகுப்பாக அமைவதால், மனத்தின் நெளிவு சுழிவுகளை யெல்லாம் அதில் பார்க்கலாம். எப்பொழுதும் மனத்தைத் தாக்குவன மாந்தனின் நிறைவேறாத ஆசைகள், கரடு முரடான எண்ணங்கள், மறைமுகமான ஏக்கங்கள், பொறாமை உணர்வுகள், பகைமை நினைவுகள் முதலியவையே! அந்நினைவுகளின் புகைச்சல்களையும் குமிழிகளையும் ஓர் உணர்வுப் புலவனின் பேரிலக்கியத்தில் வரும் உறுப்பினர் படைப்புகளில் பார்க்கலாம். தன் நிறைவேறாத ஆசைகளின் வடிவங்களைக் கற்பனையால் அவனே படைத்துக் கொண்டு, இலக்கிய வடிவில் துய்க்கின்றான். அவ்வகைக் கற்பனை தலைமாறிப் போகாமல் உள் நின்ற ஒரு நடுநிலை உணர்வு அவனைக் காக்கின்றது. சிற்சிலகால் அவ்வுணர்ச்சி புறஉலகச் சூழல்களால் தாக்குண்டு, அவ்விலக்கிய வுணர்ச்-

சியைக் கட்டவிழ்த்து விடுகின்றது. அதுபொழுது அவனல் படைக்கப்படும் இலக்கியங்களும் படிப்பாரின் அகவுணர்வைப் பலவகையாலும் அலேவுறச் செய்கின்றன. எனவே, ஓர் இலக்கியப் புலவன் தன்னே அக நோக்காகவும் கண்டு தெளியவும் அவற்றின் இழிவு சிறப்புகளேத் தானே அறியவும் ஆற்றல் பெற்றவனக விருத்தல் வேண்டும்.

14: 2: எல்லாவற்றிலும் சரேலென எம்பிப் பாயும் மனவுணர்வு படைத்தவனே இலக்கியவாக்கத்தில் வெற்றி பெறுகின்ருன். மேடுகளில் மட்டுமின்றிப் பள்ளங்களிலும் அவன் உணர்வு சடக்கெனத் தாவிக் குதிக்கின்றது. ஓர் இலக்கியப் புலவன் காற்றைப் போலும் கடுகிய மனநிலே உள்ளவனகவும், நீரைப் போல் நெகிழ்ச்சியும் பரந்துபட்டு ஒழுகும் தன்மையும் உள்ளவனகவும், நெருப்பையொத்த பொது நோக்குடையவனகவும் இருத்தல் வேண்டும். அவன் பார்வையில் கழுகுக்கிருப்பதைப்போலும் ஒருகூர்மை இருக்க வேண்டும். செவிகள் வேட்டை நாய்களுக்கிருப்பதைப்போல் மிக்க நுண்ணுணர்வு உடையனவாகவிருத்தல் வேண்டும். மொழியோ அவனுக்கு ஒரு வேலேக்காரனேப் போல் பக்கத்தில் நின்று அவன் அழைக்காத முன்னமே வந்து உதவுதல் வேண்டும். சொற்களுக்காக இறவாணத்தைப் பார்க்கும் எந்த இலக்கியப் புலவனும் இலக்கிய வாக்கத்தில் வெற்றி பெறுவதில்லே. அந்நிலேயில்தான் அவன் உலக நடை முறைகளே நன்ருகக் கருத்தில் வாங்கிக் கொள்ளவும், எழுத்தில் உலவவிடவும் முடியும். அவ்வாறு செய்யவியலாதவனல் பிறர் உள்ளங்களேப் போய்த் தொட்டு உலுக்கி, அங்கு தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் இலக்கியத்தைச் செய்தல் இயலாது. மொழியின் சொல் வண்ணங்களேக் கொண்டு அறிவு என்னுந் தூரிகையால், மனம் என்னும் திரையில் எழுதிக் காட்டும் எண்ணங்கள் எனும் ஓவியங்களே இலக்கியங்களாக மலர்கின்றன. எனவே, இலக்கியச் சிறப்புக்கு மொழிச் சிறப்பே

வண்ணமாக அமைந்து நிறமாலைகளை உண்டாக்குகின்றது. மொழி வெளிர் வாங்கும்பொழுது, இலக்கியமும் வெளிர் வாங்கி விடுகின்றது. எத்துணையாற்றல் இருப்பினும் மொழி யாற்றல் இல்லையானால் ஒருவன் செய்யும் இலக்கியத்தில் எண்ண அடர்த்தி இடம் பெறுவதில்லை.

15: 0: இலக்கியக் கட்டுக் கோப்பு :

15: 1: எப்பொழுதும் கூர்மையான சொல்லாக்கமே இலக்கியத்தைக் கட்டமைத்து, எக்காலத்தையும் எதிர் கொண்டு நிற்கும்படி வலிவுடையதாக்குகின்றது. மொழி நடை காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றது என்பது உண்மையே! ஆனாலும் இலக்கியத்தில்தான் மொழியின் மூல நிலைகள் பதிந்து வைக்கப் பெறுகின்றன. மொழி, இலக்கியத் தில் வேரூன்றி, மக்களின் புற ஈடுபாடுகளில் அண்ணாந்து தலை விரித்து நிற்கின்றது.

15: 2: மக்களின் மொழியே காலத்திற்குக் காலம், நாளுக்கு நாள், இடத்திற்கு இடம், இவர்களின் உணர்வு மாற்றங்களுக்கும் வாழ்வியல் தாக்குதல்களுக்கும் ஏற்ப மாறு பாடு அடைவது. இலக்கியமோ நிலையான மலைகளைப் போல் நின்று, தன் மொழியைக் கட்டிக் காவல் செய்கின்றது. இவ் வகையில் உலக மொழிகளில் இல்லாத ஒரு பெருஞ்சிறப் பைத் தமிழ் மொழியில் பார்க்கலாம். தமிழ் இலக்கியங்கள் உலகின் வேறு எந்த மொழி இலக்கியங்களைக் காட்டிலும் மொழிச் சிறப்பும், எண்ணச் சிறப்பும் பெற்றுத் திகழ் வதற்கு ஒருவாறு மொழியமைப்பும் கரணியம் என்க. இலக் கிய மொழியும், பேச்சு மொழியும் பழந்தமிழ் மொழி யறிஞர்களாலேயே பாகுபாடு செய்யப்பெற்றுக் கடலைப் போலும் அதன் கரையைப் போலும் அருகருகு நிலைநின்று இயங்கி வருகின்றன. காலச் சேதங்களால் கரையின் வடிவம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டாலும், கடல்போல் மொழிச்சிறப்பு தமிழ் இலக்கியங்களில் தேங்கி நிற்கின்றது.

இந்நிலை வேற்று மொழி இலக்கியங்களில் காணப்படுவது அரிது.

16: 0: கருத்தும் நடையும்:

16: 1: இலக்கியங்களுக்கு மக்கள் பேசுகின்ற மேலோட்டமான மொழிநடை தேவைப்படவே படாதா என்று கேட்கலாம். அவ்வாறு எவரும் சொல்லவில்லை. **தேவையும் தேவையின்மையும் மக்களின் மெலிந்த, வலிந்த உணர்வுகளைப் பொறுத்தன.** ஆனால் நீடித்து நிற்கும் ஆற்றல் சான்ற இலக்கியங்களுக்குக் கட்டுக்கோப்பான மொழிநடை வேண்டும் என்பதே காலம் நமக்குக் காட்டுகின்ற உண்மை. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற மென்மையான அறவிலக்கியங்கள்கூட மக்களுக்கு இன்னும் தேவைபடுகின்றனவே—ஏன்? அவற்றின் மொழிநடை அவர்கள் கருதும் அளவில் மிக எளிமையாகத்தானே இருக்கின்றது. இதில் என்ன உண்மையென்றால், அவற்றில் தேக்கி வைக்கப் பெற்ற கருத்துகளுக்கு ஏற்ப மொழிநடையும் மென்மையாக விருப்பதாலேயே அவை காலத்தை எதிர்த்து நிற்கின்றன.

16: 2: **இலக்கியத்தில் கூறப்பெறும் கருத்துகளுக்கு ஏற்ப மொழிநடையும் அமையப் பெற வேண்டும் என்பதே இங்குச் சுட்டப் பெறுகின்ற உண்மை என்று தெளிந்து கொள்ளுதல் வேண்டும்.** இரும்பைப் பஞ்சுத் துணியில் மூட்டை கட்ட முடியாது. பஞ்சை வைக்க இரும்புப் பெட்டியும் வேண்டுவதில்லை. நமக்கோ பஞ்சும் வேண்டும்; இரும்பும் வேண்டும். பஞ்சை சணல் பையிலும், இரும்பை மரப்பெட்டி அல்லது இரும்புப் பெட்டி இவற்றிலும் வைத்துக் காக்க வேண்டும். வெள்ளி நகைகளில் எவரும் வைரத்தைப் பதிப்பதில்லை. நன்செய் நிலத்தில் எவரும் விழலை வைத்து வளர்ப்பதில்லை. **வித்துக்கேற்ற நிலம்,**

பொருளுக்கேற்ற பேழை போலவே கருத்துக்கேற்ற மொழி நடை கட்டாயம் வேண்டும் என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது.

16: 3: நடை எளியதாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லப் பெறுவது எப்படிப் பிழையோ, அப்படியே நடை திட்பமானதாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒற்றுக் குத்தலாகச் சொல்வதும் பிழையே! கருத்துக்கேற்ற நடை என்பதே இலக்கியவாக்கத்தில் காலத்தைக் கடக்கும் ஆற்றலுடையது. **புறநானூற்றுக் கருத்துகளை நிலை மண்டிலத்தில் எழுதியிருந்தாலும், உலகப்பன் பாட்டைக் கலிப்பாவில் எழுதியிருந்தாலும் என்றோ இரண்டும் அழிந்து போயிருக்கும்!**

16: 4: **ஈசல்களைப் போல் பொலபொலவெனப் பூத்து வெளி வந்து சிறகடித்துப் பறக்கும் இலக்கியங்கள் காலத்துக்கே எருவாகின்றன.** அவை சிறந்தன, உயர்ந்தன என்று எத்தனைதாம் வான்முட்டப் பேசி வாய்ப்பறை கொட்டினாலும், காலையில் தோன்றி மாலையில் கருகி நிற்கும் காளாம்பிகளைப் போல், அவையும் விரைந்து அழிந்து போகவிருப்பதைப் பார்க்கையில், அவற்றின் இலக்கிய வாசிரியர்கள்மேல் இரக்கப்படாமல் இருக்க முடியாது.

16: 5: மற்று, இலக்கியம் எந்த வடிவில் வேண்டு மானாலும் இயங்கலாம். **பாட்டு, உரைநடை, கதை, கட்டுரை, பழமொழி, ஒப்பாரி, தாலாட்டு, விடுகதை** முதலிய யாவும் இலக்கியப் பெருமை வாய்ந்தனதாம், இவை கருத்திற்கேற்பவும், மொழித்தரத்திற்கேற்பவும், மக்கள் மனநிலைக்கேற்பவும், காலநிலைக்கேற்பவும், அமைந்து, நிலைத்து நிற்கவும் அழிந்து போகவும் செய்கின்றன. கழகக் காலப் பாடல்கள் நிற்பதைப் போலவே, அன்றிருந்த பழமொழிகளில் சிலவும் இன்று வாழ்வதைப் பார்க்கின்றோம். **மாந்தரின் உணர்வு நிலைகளின் அடியூற்-**

றங்கள் என்றென்றும் ஒன்றுதாமே! அவர்களின் புறமாறு பாடுகளால் அவை அழிவுறுவதில்லை. **எனவே, கருத்தும் நடையும் மொழிக்கு இருகரைகள் போல் இருந்து, இலக்கியத்தைக் கட்டிக் காக்கின்றன.**

17: 0: இலக்கிய வகை:

17: 1: இலக்கியங்கள் பலவகையன. மாந்தனுக்கு மிக இன்றியமையாத உணர்வுகளான காதலும் வீரமும் தழுவிய இலக்கியங்களே மக்களைப் பெரிதும் கொள்ளை கொள்ளுகின்றன. உலக இலக்கியங்களிலேயே காதல் இலக்கியங்களும் வீர இலக்கியங்களுந்தாம் மிகுதி. இவை தவிர, சமய விலக்கியங்களும், அற விலக்கியங்களும், போர் இலக்கியங்களும், இன விலக்கியங்களும், குல விலக்கியங்களும், வரலாற்றிலக்கியங்களும், குழந்தை இலக்கியங்களும் உண்டு. இவற்றிலும் அவையவற்றின் தரங்களுக்கேற்ப மொழிநடை மாறுபடுவதுண்டு.

17: 2: இக்காலத்தில் குல, இன, இலக்கியங்களுக்கு மதிப்பில்லை. அறவிலக்கியங்கள், சமயவிலக்கியங்கள் ஆகியவற்றிற்குங்கூட இளைஞர்களிடத்தில் அத்துணை வரவேற்பில்லை. காதல் இலக்கியங்களும், வீர இலக்கியங்களும் என்றும்போல் வரவேற்கப் பெற்றாலும் உணர்வு நிலைகளில் சிறிது மாறுபட்டு விளங்குதல் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இக்கால் செய்யப்பெறும் அவ்வகை இலக்கியங்களில் பாலியல் உணர்ச்சி பெரிதும் புகுத்தப் பெறுகின்றன. இடைக்காலத்துப் புலவர்கள் சிலர் எழுதிய தூது, உலா, மடல், அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகைகளில் இடையிடையே பாலியல் உணர்வு தூண்டப் பெற்று வந்தன. அவற்றைப் பெரிதும் சுவைத்த செல்வர்களுக்காகவும், சிற்றரசர்களுக்காகவும் அவ்வாறு எழுதப் பெற்றன. அவற்றுள் சொல்லாரவாரத்திற்காகவும், சுவைக்காகவும் தமிழ் மொழிச் சொற்களுடன் வடமொழிச் சொற்கள்

வரைதுறையின்றிக் கலக்கப்பெற்றன. மொழியைப் பற்றி அக்கறையற்ற வறுமைப் புலவர்களே, மூடச் செல்வர்களிடம் பரிசில் பெறவேண்டி அவ்வகை இலக்கியங்களை ஏராளமாக எழுதிக் குவித்தனர். அவை மொழிச்சிறப் பிழந்தமையால், காலச்சிறப்பும் இழந்து கணக்களவில் எண்ணப்பெறுகின்றன.

17: 3: கழகக் காலத்திற்குப்பின் உள்ள இலக்கியங்களில் மொழிநடை வீழ்ச்சியும், தரக்குறைவும், இயற்கையறிவுக் குறைவும், வெற்றுச் சொற்புணர்ச்சியும் தெற்றெனப் புலப்படுகின்றன. இலக்கிய நீள்மை அவற்றில் மிகுந்து காணப் பெறுகின்றது; சமயவெறியும், மூட நம்பிக்கைகளும் அவற்றில் மிகுந்திருக்கின்றன; போர் வெறிகள் குமிழியிடுகின்றன. இவ்வாரவாரப் போலியுணர்ச்சிகளிடையே மொழி ஒரு பொருட்டாக மதிக்கப் பெறவில்லை. பிற்கால இலக்கியங்களில் மொழி வீழ்ச்சியுற்றதற்கு அறிவுக் குறைவும் ஒரு கரணியமாகும். **மக்களின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்ததே மொழி வளர்ச்சியும். அறிவு நிலை திரியும் பொழுது மொழிநிலையும் திரியும்; இலக்கிய நிலையும் திரியும்** என்பதற்கு அவை தக்க சான்றுகளாய் அமைந்திருக்கின்றன.

18: 0: இக்கால இலக்கிய நிலை :

18: 1: இக்காலத்தில் உள்ள இலக்கிய நிலைகளை எண்ணும் பொழுதெல்லாம் மனம் நிறைவடைவதேயில்லை. இலக்கிய வாக்கத்திற்கே மிக இன்றியமையாதனவாகிய கருத்தும் மொழியும் அவற்றுள் மிகவும் தாழ்ச்சியுற்றுக் கிடக்கின்றன. கண்டதே காட்சியாகவும் கொண்டதே கோலமாகவும் இக்கால இலக்கியங்கள் வடிக்கப் பெறுகின்றன. கதையிலக்கியமும் கட்டுரையிலக்கியமுமே மிகுதியும் இக்காலத்தை ஆட்கொண்டுள்ளன. மக்கள் மனத்தில் ஆழப் பதியும் இலக்கியவுணர்வு, வாழ்க்கைப்

பாதையில் தலைதெறிக்க ஓடும் இக்கால மாந்தரிடை மருந்துக்கும் காண முடிவதில்லை. கதைகளிலும் சிறுகதை யிலக்கியமே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றது. அப்பொழுதைக்கப்பொழுது சுவைத்துமிழும் இலக்கியங் களே பெரிதும் எழுத்துலகை ஆட்சி செய்கின்றன.

18: 2: இக்கால மக்கள் ஆழமாக எண்ணுவதில்லை. இலக்கியவுணர்ச்சியைப் பற்றிப் பெரும்பாலார்க்கு உயர் வான கருத்தில்லை. சமய விலக்கியங்களுக்கு இடைக் காலத்தில் இருந்ததைப் போன்ற மதிப்பு ஓரளவிருந்தாலும் அவற்றைப் பரப்புவதில் ஒருவகை உள்நோக்கமும் மக்களை ஏமாற்றும் தன்மையும் மிகுதியும் கடைப்பிடிக்கப் பெறு கின்றன. இலக்கிய உலகிலும் அரசியல் புகுந்து அதன் உயர்ந்த நோக்கத்தைத் திசை திருப்பிச் செல்லுகின்றது. இடைக்காலத்துப் பாலியல் உணர்வோடு, மேனாடுகளி-லிருந்து இறக்குமதி செய்யப் பெற்ற இழிவுணர்வும் இரண்டறக் கலந்து, இக்கால இலக்கியங்களில் பரக்கக் காணப்பெறுகின்றன. மனத்தைச் செப்பப்படுத்தும் இலக்கியத்தின் உயர்ந்த உட்கொள்கை, புறத்தே தூக்கி யெறியப் பெற்றுவிட்டது. அவ்வப்பொழுது எழும் உடலுணர்ச்சிகளுக்கும் வாழ்க்கையின் மேடு பள்ளங் களுக்கும் இக்கால இலக்கியத்தில் ஏராளமான இடம் ஒதுக்கப் பெறுகின்றது. **வாழ்க்கைத் துயரங்களை மறந்து, மன மாசுகளைக் களைந்தெடுக்கவே பயன்பட்டு வந்த இலக்கியங்கள், இக்கால் அவற்றை அப்பட்டமாக எடுத்துரைப்பதற்கே பயன் படுத்தப் பெறுகின்றன.** எனவே இவ்விலக்கியங்களைப் படிக்கும் ஒருவரின் மனமாசு களும் வாழ்வுத் துயரங்களும் களையப் பெறுவதற்கு மாறாக அவை மேலும் அவர் மனத்தில் ஏறி நின்று, நினைவுப் புயல்களை எழுப்பி, அவரை அடிக்கடி அலைக்கழிக்கவே முற்படுகின்றன.

18: 3: இக்கால் இலக்கிய வரலாறுகள், ஆய்வுரைகள் எழுதுகின்ற புலவர்களும் அந்த வீழ்ச்சியை வெளிப்படை யாகச் சுட்டிக் காட்டுவதற்கே அஞ்சுவதுடன், போலித்தன மாகவும் விருப்பு வெறுப்புடனுமே அவற்றைக் காசுக்காக எழுதித் தள்ளுகின்றனர். **உயர்ந்த கல்லூரிகளில் பணி யாற்றும் மொழிப் புலவர்களிடையே கூடத் தாய் மொழிப் பற்று குதிரைக் கொம்பாக விளங்குகின்றது.** மொழியைக் காட்டிக் கொடுத்து அவர்கள் பிழைக்கும் தன்மைகளைப் பார்த்தால் எதிர்காலத்தில் தமிழ் இவர்கள் கைகளிலேயே நசுக்குண்டு புதைந்து போகுமோ என அஞ்ச வேண்டி யுள்ளது. **அவர்கள் இடைக்காலப் புலவர்களைப் போல் பொருள் நசைக்காகவே மொழி வாணிகம் செய்வதாகப் படுகின்றது.** இக்கால இலக்கியங்களிலும் பாடநூல் களிலும் மொழிநடை கவனிக்கப் பெறுவதேயில்லை. இங்குள்ள செய்தித்தாள்களிலும், கிழமை, மாத வெளியீடு களிலும் மொழிக்கொலையும் இலக்கிய வேள்வியும் அன்றாடம் நடைபெறுகின்றன. இவ்வகையில் பொதுமக்களின் மொழி யறிவை இலக்கிய வாசிரியர்கள் பெரிதெனமதிக்கும்படி செய்து விடுவார்களோ என்றுகூட எண்ண வேண்டியிருக் கின்றது. இலக்கியத் திறனாய்வாளர்களும் இக்கால் உள்ள போலி நிலைகளைக் கவனியாது புறக்கணிப்பாகவே இருந்து வருகின்றனர்.

18: 4: இக்காலப் பாட்டிலக்கியத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கவே வருத்தமாயிருக்கின்றது. **வாய்க்கு வந்ததைப் பாடுவது ஒரு மரபாகவே கடைப்பிடிக்கப் பெற்று வரு கின்றது.** அவற்றில் உள்ள கரு, கூறப்பெறும் கருத்து, கையாளப்பெறும் மொழிநடை, யாப்புநிலை—யாவும் மேலோட்டமான புல்லிய நிலைகளையே பற்றி நிற்கின்றன. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவெல்லாம் குப்பைக்குப் போய் அழுகத் தொடங்கிவிட்டன. **அவற்றிற் கெல்லாம் கட்டுப்படாத சொல் எம்பல்கள் அமைந்த உரை**

நடைத் தொடர்களே பாடல்கள் போல் மடக்கி எழுதப் பெறுகின்றன. வில்லியும் ஒட்டக்கூத்தனும் இக்கால் வந்தால், அவர்கள் காதுகளும் கைகளும் ஒட்ட நறுக்கப் பெற்ருலும் வியப்பதற்கில்லை! மொழி இன்றுள்ள இலக்கிய மேய்ப்பர்களிடையே படாதபாடு படுகின்றது.

18: 5: தமிழ் மொழியில் உள்ள சொற்களில் பத்துப் பதினைந்து விழுக்காட்டுச் சொற்களே இக்கால் பயன் படுத்தப் பெற்று வருகின்றன. பெரும்பாலும் ஒரு பொருளுக்குள்ள பல்வேறு பண்புகளைக் குறிக்கும் பல சொற்களில் ஒன்ருே இரண்டோதாம் திரும்பத் திரும்பக் கையாளப் பெறுகின்றன. மிகுதியுள்ள சொற்கள் தேவையற்ற சொற் பட்டியல் என இழித்துரைக்கப் பெறுகின்றன. இக்கால இலக்கிய ஆசிரியர்களுக்குத் தலைமுடி நிறைந்து பம்மியிருந்தால் மூளை பெரிதென்று கருதப் பெற்று விடுகின்ற தால், எல்லாரும் தலைமுடியை முள்ளம் பன்றியைப் போல் சிலிர்ப்பிவிட்டுக் கொண்டு திரிகின்றனர்.

18: 6: ஆழமற்ற உணர்வு, ஆழமற்ற அறிவுநிலை, ஆழ மற்ற மொழித்திறன், ஆழமற்ற வாழ்க்கை நிலைகள் இவற்றி லேயே இலக்கியவாக்கம் முடிவடைந்து இலக்கிய வெற்றி யும் கிடைத்து விடுகின்றது. மனத்தின் மிக எளிய நிலை களிலேயே மக்கள் நிறைவடைந்து விடுகின்றனர். நரம்புத் தளர்ச்சி யுள்ளவன் தன் மனைவியைத் தொட்டவளவிலேயே நிறைவடைந்து விடுவதைப் போல், மூளைத் தளர்ச்சியுடைய இன்றைய எழுத்தாளர்கள், மொழியைத் தொட்ட அளவி லேயே முதறிவுற்றவர்களாக மதிக்கப் பெறுகின்றனர்.

18: 7: மேற்கூறப் பெற்ற நிலைகளுக்கெல்லாம், மக்களிடை அறிவியல் உணர்வு தலைதூக்கியதே கரணியம் என ஓர் அமைவு கூறப்பெறுகின்றது. அரசியல் மேலீடே கரணியம் என்றும் ஒருசாரரால் உரைக்கப் பெறுகின்றது.

எப்படியும் இலக்கியத்தரம் தாழ்ந்து போவது மக்களிடை மனவுணர்வுக் குறைபாட்டையே காட்டும். அவர்களிடை இக்கால் ஏற்பட்டிருக்கும் பண்புச் சிதைவுக்கும், ஒட்டுறவு இல்லாத நடைமுறைகளுக்கும், அவர்தம் மேலோட்டமான இலக்கியவுணர்வே பெருங்கரணியமாம் என்க.

19: 0: மொழிநிலை உயர்வு:

19: 1: எஃது எவ்வாறுயினும் இந்நூற்றுண்டின் முற் பகுதியிலிருந்த மொழிப் புறக்கணிப்பு நிலை, இக்கால் ஓரளவு குறைந்து வருவதை ஒரு புறத்தில் பார்க்கின்றோம். அந்நிலை எதிர்கால இலக்கிய வளர்ச்சியில் ஒரு நம்பிக்கையை ஊட்டுகின்றது. கற்றவர்களிடையில் உள்ள ஒரு கணிசமான தொகையினரிடை மொழிப்பற்று விழிப்புற்று வருகின்றது. தமிழ்நாட்டிலும் தமிழர்கள் வாழ்கின்ற அயல் நிலங்களில் சிலவற்றிலும், மொழியின் பெயரால் கழகங்களும், மன்றங்களும், இயக்கங்களும் தோன்றிச் செயற்பட்டு வருகின்றன. இந்நிலை பெரிதும் ஆறுதலளிக்கின்றது. **தனித் தமிழ் வளர்ச்சிக்கென ஓர் இயக்கமே தோன்றி மக்களிடை தெளிவான மொழிநடையை உருவாக்கி வருகின்றது.** அரசியல் மேலீட்டால் அயன்மொழி வல்லாண்மை ஓங்கி வந்ததும், அதனை எதிர்க்க ஒரு போராட்டமே நடத்தப் பெற்றதும் எதிர்கால நம்பிக்கைக்கு இன்னும் வலிவூட்டும் நிகழ்ச்சியாய் அமைந்திருந்தது.

19: 2: பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள மாணவர்கள் தம்மிடையில் தமிழுணர்ச்சி ஓரளவு வேரூன்றி வருகின்றது. மொழியுணர்வு கொளுத்திய **பாவேந்தர் பாரதி தாசனின்** பாடல் முழக்கங்கள் ஆங்காங்கே கேட்கப் பெற்று வருகின்றன. **மறைமலையடிகளாரின்** தமிழும் ஒரு தமிழா எனக் கேட்கப் பெற்றநிலை சிறிது சிறிதாக மறைந் தொழிந்து, அவர் தோற்றுவித்த **தனித்தமிழ் இயக்கம்**

மெல்லெனப் பரவிவருகின்றது. **மறைமலையடிகளாரைப்** பின்பற்றி **மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின்** தலைமையில் தூய தமிழியக்கம் செயலாற்றி வருகின்றது.

19: 3: **இத்தகைய மொழி வளர்ச்சியை யொட்டித் தமிழ் இலக்கியத்திலும் ஒருவகைப் புத்துணர்வு பிறந்து வருவதை எவரும் மறுக்க முடியாது.** தமிழ் மறுமலர்ச்சியுற்று வருவதையடுத்து, நல்ல தரமான நடையில் கதையிலக்கியங்களும், சிறுகதை இலக்கியங்களும், பாட்டிலக்கியங்களும் தலையைக்காட்டி வருவது மனத்துக்குத் தென் பூட்டுகின்றது. இந்நிலைகளை மேலும் ஊக்கப்படுத்துவதற்குரிய ஆக்கப் பணிகளில் நாம் கவனம் செலுத்தும் காலமும் வந்துவிட்டது என்றே சொல்லலாம். அத்தகைய வகையில் என்ன பணிகளைச் செய்யலாம் என்பது பற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்போம்.

20: 0: தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்:

20: 1: நம் செந்தமிழ் மொழியில் உள்ள பழைய இலக்கியங்கள் என்றென்றும் தத்தம் தனிப்பெருமையைப் பறைசாற்றி நிற்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. ஆனல், அத்தகைய பெருமை நிலைகளுக்கெல்லாம் இழுக்கு நேரும் வகையில், இக்கால இலக்கியம் இழிந்து படுவதையும், அதையொட்டி மொழி இழிந்து வருவதையும் நாம் முதற் கண் தடுத்து நிறுத்தியாகல் வேண்டும். **மொழித் தகவற்ற இலக்கியத் தோற்றங்களைத் துணிந்து கடிவதற்கு நாம் கற்றுக் கொள்ளல் நல்லது. ஆட்சி நிலைகளில் தவறு கண்டால் நாம் இடித்துரைப்பதைப் பழகிக் கொண்டது போல், நம்மைச் சுற்றி எழும் போலி இலக்கியங்களையும் அவ்வாறு தட்டிக் கேட்பதற்கு நாம் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.**

20: 2: ஊருக்கு ஒன்ருகவோ, மாவட்டத்துக்கு ஒன்ருகவோ இலக்கியக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும்.

அவ்விலக்கியக் கழகங்களில் தமிழ்மொழிப்பற்றும் துணிவும் வாய்ந்த பல்துறை அறிஞர்களை ஒருங்கு கூட்டி, **'இலக்கிய ஆய்வுக்குழு'** எனும் பல குழுக்களை அமைத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவையும் தலைமையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டக் கழகமும், அனைத்து மாவட்டக் கழகங்களுக்கும், பொதுவாக ஒரு மாநிலக் கழகமும் அமைத்தல் வேண்டும்.

20: 3: ஆங்காங்கு உள்ள இலக்கிய நூலாசிரியர்களும், பிறதுறை நூலாசிரியர்களும் தாங்கள் எழுதுகின்ற நூல்களின் கைப்படியினை, அச்சிடுவதற்கு முன்பே, அந்தந்த இலக்கியக் கழகங்களில் உள்ள ஆய்வுக்குழுவிடம் ஒப்படைத்து, அக்கழகங்களின் சான்றிதழ் பெறுதல் வேண்டும். ஆய்வுக் குழுவினர் அந்நூல்களில் உள்ள கருத்துகளை எவ்வகையாலும் திருத்தவோ அடிக்கவோ செய்யாமல், அவற்றின் உயர்வு தாழ்வுகளை அந்நூலாசிரியர்களுக்கே விட்டு விட்டு, அவற்றில் உள்ள கலப்புமொழி, சொற்பிழை, தொடர்ப்பிழை முதலிய மொழி, இலக்கணப் பிழைகளை மட்டும் சுட்டிக்காட்டித் திருத்தும்படி ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறுதல் வேண்டும்.

20: 4- இத்தகைய அறிவு முயற்சிக்காக நூலாசிரியரை, ஒரு நூலுக்கு இவ்வளவு என்று வரையறுக்கப்பெற்ற மிகக் குறைந்த தொகையொன்றினைக் கட்டணமாகவும் செலுத்தச் செய்யலாம். இல்லெனின், இலவசமாகவும் ஒரு தொண்டுணர்ச்சியாகச் செய்தும் கொடுக்கலாம். ஒரு மாவட்டத்தின் எந்த இலக்கியக் கழகத்திலும் தேர்வு பெற்ற-அல்லது சான்றிதழ் பெற்ற ஒவ்வொரு நூலுக்கும், மாநிலக் கழகம் மதிப்புரை அல்லது உயர்தரச் சான்றிதழ் அல்லது இரண்டும் வழங்கலாம். **மாநில இலக்கியக் கழகத்தின் சான்றோ, மதிப்புரையோ பெறாத எந்த நூலும் அச்சிடத் தகுதியற்றதென்றோ பள்ளி நூலகங்கள், பொது நூலகங்கள் முதலியவற்றில் வைக்கக் கூடாதன என்றோ அறிவித்து விடுதல் வேண்டும்.**

20: 5: மேலும், அவ்விலக்கியக் கழகங்கள் ஆங்காங்கு இலக்கிய, இலக்கண வகுப்புகள் நடத்தி, அவ்வவ் வட்டார எழுத்தாளர்களைப் பயிற்றுவிக்கவும் செய்யலாம். இல்லெனின் இதற்கென ஓர் இலக்கியக் கல்லூரியே அரசுச் சார்பில் நடத்தலாம். எதற்கும் எல்லாரும் ஒருமுகப்பட்டு இணைந்து செயலாற்றினால் தவிர, நம் மொழியையும் வளர்ச்சியுறச் செய்ய முடியாது; இலக்கியத்தையும் வளர்த்துவிட முடியாது.

20: 6: எழுத்துரிமை என்னும் பெயரால் மொழித் தரத்தைக் குறைத்துத் தங்கள் மனம் போன போக்கில் எழுதிக் குவிக்கும் புன்மை நிலைகளை இந்த வகையிலன்றி வேறு எந்த வகையாலும் தடுக்க முடியாது, மேலும் இக்கால் திரைப்படங்களில் உள்ள காட்சிகளையும், கீழ்த்தரமான உரையாடல்களையும் தணிக்கை செய்வ-தில்லையா? அக்கால் உரிமை என்னாகின்றது? மேலும் இலக்கியக் குழு அறிவுறுத்துவது, இலக்கியத்தில் உள்ள பிழைகளைத் திருத்திக் கொள்வதற்குத்தானே யன்றி, நூலின் கருத்துகளை மாற்றச் சொல்வதற்காக இல்லை யென்பதை நாம் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

20: 7: இனி, கருத்து, மொழி இவையிரண்டிலும் சிறந்திலங்கும் இலக்கியங்களுக்கு அரசு முழுத்துணையாக இருந்து உதவுதல் வேண்டும். மாநில இலக்கியக் கழகம் மிகவுயர்வாகக் கூறுகின்ற இலக்கியங்களை அரசே தன் சார்பில் வெளியிட்டு உதவி நூலாசிரியர்களை ஊக்குதல் வேண்டும். அத்தகைய நூலாசிரியர்களைப் பொது மன்றங்களும் அழைத்துப் பாராட்டிப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தலைத் தங்கள் தலையாய தொண்டாகக் கருதுதல் வேண்டும். **இவ்வழிமுறைகளைப் பின்பற்றுவோமானால், இன்னும் இருபது ஆண்டுகளில் தமிழ்மொழி வளர்ச்சியுறுவதுடன், தூய்மையுற்று விளங்கி,**

அதன்வழி இலக்கிய வாக்கமும் சிறந்திலங்கும் என்பதில் ஐயமே இல்லை.

20: 8: எவ்வாற்றானும் தமிழ் வளர்ச்சி என்பது மொழி வளர்ச்சியே! மொழி வளர்ச்சி என்பதில் அதன் தூய்மையைப் பேணுவதையே தலையாயதாகக் கொள்ளுதல் வேண்டும். **தூய்மையைக் கட்டழிக்கும் எந்த நிலையும் மொழி வளர்ச்சிக்கு ஊறு செய்வதேயாகும். சிலர் மொழித் தூய்மையை எள்ளல் செய்கின்றனர். சிலரோ பிற மொழிக்கலப்பால் மொழி வளரும் என்கின்றனர். அவர்கள் கலப்படக்காரர்களை யொத்த குற்றவாளிகளே! அவர்கள் இரு தரப்பினரும் தாய்மொழியைப் பற்றிக் கவலையுறாதவர்களே! தாய்மொழியைப் பற்றிக் கவலையுறாதவர்கள் தாய்நாட்டைப் பற்றியும் கவலைப் படாதவர்களாகவே இருத்தல் வேண்டும். இனி, அவர்கள் பெற்ற தாயையும் கூடப் புறக்கணிப்பவராக விருக்கலாம். அத்தகவிலாதார் எந்த ஆக்கநிலையைப் பற்றியும் கவலையில்லாதவர்களே. எனவே அவர்களைப் பற்றி நாமும் கவலை கொள்ளத் தேவையில்லை.**

21: 0: முடிவுரை:

21: 1: இதுகாறுங் கூறியவாற்றால், மொழியின்றி இலக்கியம் இயங்காது என்றும், நம் தமிழ் மொழிச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் மிகவும் செழுமை வாய்ந்தன என்றும், இன வீழ்ச்சியால் மொழி வீழ்ச்சியுறும் என்றும், மொழி வீழ்ச்சி இலக்கிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்றும், கலப்பு நிலையே மொழிச் சிதைவை உண்டாக்கி இலக்கிய வளர்ச்சிக்குக் கேடு செய்யும் என்றும், எனவே அது தவிர்க்கப் பெற்றாலொழிய மொழி வளர்ச்சியுறாது என்றும், மொழிக் கலப்புப் போன்றதே ஒலிக்கலப்பும் என்றும், அதுவும் தவிர்க்கப் பெறுதல் வேண்டும் என்றும், இலக்கிய வாக்கமும்

மொழி வளர்ச்சியும் இணைந்து நடப்பவை என்றும், மொழி-யும் கருத்தும் இலக்கியத்தின் இரு கரைகள் என்றும், இலக்கியக் கட்டுக்கோப்பென்பது அதன் மொழிநடையும் கருத்தும் செறிந்திலங்குவதென்றும், இக்கால இலக்கியத்தின் இழிநிலை இன்னதென்றும், அந்நிலையில் ஒரு மாற்றம் எய்தி வருவது மனத்திற்கு ஆறுதலளிக்கின்றதென்றும், இனி, எதிர்காலத்தில் தமிழ் வளர்ச்சியில் எத்தகைய அக்கறை காட்டப்பெறுதல் வேண்டுமென்றும் ஒருவாறு தெளிந்து கொண்டோம். இக்கருத்துரைகளே இத்துறையில் முடிவானவை அல்ல. நம் திறனுக்கும் முயற்சிக்கும் தக்கவாறு அவற்றை இன்னும் விளங்க அமைத்துக் கொண்டு, இவ்வகையில் மேலும் ஊக்கமாகவும் சிறப்பாகவும் செய-லாற்றுதல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இக்கருத்துரையை முடித்துக் கொள்கின்றேன்.

தென்மொழியின் தனித்தமிழ் வெளியீடுகள்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதுமுறை இலக்கியங்கள்

1.	எண்சுவை எண்பது	(அச்சில்)
2.	பாவியக் கொத்து (முதல் தொகுதி)	15-00
3.	பாவியக் கொத்து (2ஆம் தொகுதி)	(அச்சில்)
4.	ஐயை (முதல் பகுதி)	6-00
5.	ஐயை (இருபகுதி இணைந்தது)	11-00
6.	கொய்யாக்கனி (மறுபதிப்பு)	13-00
7.	கற்பனை ஊற்றுக் கட்டுரைகள் 1,2	(அச்சில்)
8.	பள்ளிப் பறவைகள் (முதல் பகுதி)	6-30
9.	பள்ளிப் பறவைகள் (2 ஆம் பகுதி)	(அச்சில்)
10.	மகபுகுவஞ்சி (மறுபதிப்பு)	(அச்சில்)
11.	கனிச்சாறு (முதல் தொகுதி)	23-00
12.	கனிச்சாறு (இரண்டாம் தொகுதி)	19-00
13.	கனிச்சாறு (மூன்றாம் தொகுதி)	26-00
14.	நூறாசிரியம் (முதல் தொகுதி)	5-00
15.	நூறாசிரியம் (இரண்டாம் பகுதி)	5-00
16.	தன்னுணர்வு (மறுபதிப்பு)	2-00
17.	இளமை உணர்வுகள்	(அச்சில்)
18.	பாவேந்தர் பாரதிதாசன்	16-00
19.	இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்	3-00
20.	வாழ்வியல் முப்பது	2-00
21.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	3-00
22.	உலகியல் நூறு	8-50
23.	அறுபருவத் திருக்கூத்து	(அச்சில்)
24.	இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?	1-00
25.	சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும்!	1-00
26.	செயலும் செயல் திறனும்	35-00
27.	தமிழீழம்	55-00

பிற வெளியீடுகள்

1.	சிங்கள அமர்களம், அறிஞர் ப. அருளி	5-00
2.	இவை தமிழல்ல ,, ,,	100-00
3.	இந்திய அரசே இன்னுமா உறக்கம்	5-00
4.	சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் - அறிஞர் ப. அருளி (5- தொகுதிகள்)	100-00

பிற விளக்கங்களுக்கு : தென்மொழி, சென்னை-5.

தனித்தமிழ்த் தாளிகைகள் 'தென்மொழி' 'தமிழ்நிலம்' 'தமிழ்ச்சிட்டு' படியுங்கள்.

நிறைமொழி அச்சகம், சென்னை - 600 015.